செ.வெ.எண்: 80/2018 நாள்: 26.01.2018

**ஓகி புயலால் பாதிக்கப்பட்ட வாழை, ரப்பர் விவசாயிகள் அரசின் சிறப்பு வாழ்வாதார திட்டத்தின் மூலம் பயன்பெற விண்ணப்பிக்க காலக்கெடு - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

ஓகி புயலால் பாதிக்கப்பட்ட வாழை, ரப்பர் விவசாயிகள் அரசின் சிறப்பு வாழ்வாதார திட்டத்தின் மூலம் பயன்பெற விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பேரிடர் நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் இடுபொருள் மானிய உதவித்தொகை வேளாண்மை பயிர்களுக்கு ரூ.77,78,093/- தோட்டக்கலை பயிர்களுக்கு ரூ.9,37,08,000/- என மொத்தம் ரூ.10,14,86,093/- விவசாயிகளின் வங்கி கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. மேலும் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட வாழை, ரப்பர் மற்றும் கிராம்பு விவசாயிகள் அரசின் சிறப்பு வாழ்வாதார திட்டத்தின்கீழ் பயன்பெற, தோட்டக்கலைத்துறைக்கு உரிய படிவத்தில் விண்ணப்பித்து மீண்டும் புதிதாக பயிர் சாகுபடி மற்றும் தேனீ வளர்ப்பு மேற்கொள்வதற்கு மானியம் பெற்று பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்த சிறப்பு வாழ்வாதார திட்டத்தின்கீழ் பயன்பெற தோட்டக்கலைத் துறைக்கு விண்ணப்பிக்க வாழை பயிர் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு 31.01.2018 கடைசி நாளாகவும், ரப்பர் பயிர் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு 10.02.2018 கடைசி நாளாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கூடுதல் விபரங்களுக்கு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களையோ, தோட்டக்கலை அலுவலர்களையோ தொடர்புகொண்டு இத்திட்டத்தில் இணைந்து பயன்பெற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.